முருகப்பெருமான் துணை

**மகான் சனீஸ்வர பகவான் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**12.12.2023,** செவ்வாய்கிழமை

1. வானவர்கள் வியந்து நோக்க
   வள்ளலாய் வந்த அரங்கா
   தானதரும சக்தி பெருக்கி
   தரணி காக்கும் ஞான தேசிகா
2. தேசிகனே உன் பெருமை கூறி
   தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
   ஆசிதனை சனீஸ்வர பகவானும்
   அருளுவேன் சோபகிருது தேள் திங்கள்
   (சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 26 ம் நாள், 12.12.2023, செவ்வாய்கிழமை)
3. திங்களிலே இருபானாற் திகதி குசன்வாரம்
   தெரிவிப்பேன் உலகநலம்பெற
   பங்கமான இயற்கை சீற்றமும்
   பாருலகில் அழிவுகள் அனைத்துமே
4. அனைத்துமே மனித சக்தியின்
   அளவில்லா சுயநலத்தாலும்
   வினைகூட செய்கின்ற பேராசை
   வந்ததை எல்லாம் தனதாக்கி
5. ஆக்கியே பொதுநலம் மறந்து
   ஆஸ்தி கீர்த்தி பதவி வெறியென
   பக்குவமிலா ஆடுகின்ற ஆட்டமே
   பாதகம் பலவாக நடக்குதப்பா
6. அப்பனே அளவுக்கு மேலான சேர்க்கை
   ஆசையை விடாத போக்கை
   காப்பென கருதி நடத்துகின்ற
   கலியின் ஆளுமையும் காரணம் அப்பா

7. அப்பனே தருமம் நீதி மறந்தால்
அழிவு வந்து அச்சமூட்டுமப்பா
தப்பென தெரிந்தும் தொடரும்
தகாத செயல்கள் யாவும் மாறி

8. மாறியே இயல்பான வகையில்
மத இன சாதிபேதம் சாதி பேதம் கடந்து
ஆறுதல் தந்து உலக உயிர்கள்
அனைத்துக்கும் தீங்கு தராத வண்ணம்

9. வண்ணமுடன் செயலும் சேவையும்
வளர வையகம் எங்கிலும்
எண்ணம் தூய்மை கண்டிட
எல்லாம் வேலவன் செயலென

10. செயலென சேவை கூட்டி
சித்த ஞான அரங்கநெறியை
தயவே வடிவான அம்சமாக ஏற்று
தரணியோர் பின்பற்றி வந்திட

11. வந்திட பேருலகம் அமைதிபாதுகாப்பு
வலுவடையும் இயற்கை மகிழ்வுற
எந்தவித அழிவும் அனுகாத
எல்லா வளமும் கண்டு சிறக்கும்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—